# கடற்கரை கவியரங்கு எண் - 624

நாள் 02-04-2023



# மெய்மை யாதோ?

மெய்யறிவைத்தேடி நாளும்மேதினியில் வாழ்வோரே!
பொய்யறிவைப் பலரும் புகட்டுதலைக் காணீரோ!
பொய்யுரைத்தல் பாவமென்று போதனைத்தான் செய்வார்!
கைநிறைந்த காசுடனே கடவுளையும் தான் ஏய்ப்பார்!

பைநிறையப் பணமிருந்தால் பார்வையிலும் பொய்யிருக்கும்!
செய்கையிலே சிந்தையிலே சீரில்லா மனமிருக்கும்!
பொய்யுரைக்க கடவுளையே பொதுவாக்கிக் களமிடுவார்!
மெய்யன்றி வாழ்விலே மேதைமை ஏதுமில்லை என்பார்!

பொய்க்குப் புதிதாய்ச் சாயம் பூசுகிறவர் அவர்தாமே!
மையிருளே இறைமை என்பார் மரணமிலா வாழ்வைச்சூட,
பையவே என்கரத்தைப் பற்றிடுக போதும் என்பார்!
ஐயாகோ அவனியிலே மக்கள்நிலை தானிதுவே!

செய்யுமொரு பூசெய் யெல்லாம் குருவுக்கே தான் என்பார்.
தொய்வின்றி பலகதைகள்தொகுத்தே அளித்திட,
மெய்யாய் அதனை நம்பி மெய்சிலிர்த்துப் போவாரன்றோ!
மெய்யறிவும் காணாமல், மெய்மறந்து திரிவார்தாமே!

மடைமையிலும் மடமையென்று மார்தட்டிச் சொன்னாலும்,
விடைதேடி வராமல் குருவென்று அங்கேயே நிலைப்பாரே!
தடையேதும் இல்லாமல் தன்னறிவு தான் இழப்பார்!
கடைதேடி விற்பனையில் காண்பரோ மெய்யறிவு தனையே!

கனிவாக தன்மனத்தைக் காட்சிப் படுத்தி, இயக்கத்தின்,
கதவுகளை அறிவென்னும் சாவிகொண்டு திறத்தலே,
கனியாக மெய்யறிவை காணும் நிலையைக் காட்டுமன்றோ!
**கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்** என்பதேயாம் அது!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
01-04-2023

